# ஸ்ரீ மதே ராமாநுசாய நம :

## நம் --ஆழ்வார்

ஸ்ரீ மந் நாராயணன் ஜீவர்களுக்கு நல்லநெறியைக் காட்டவேண்டும் என்று எத்தனையோ லீலைகள் செய்து பார்க்கிறான். ஜீவாத்மா தன்னை உணர்வதற்கான வழியை தெரிந்துகொள்ள வேண்டும் என்ற பேராவலில் பரமன் விதவிதமான வழிகளில் முயற்சி நடத்துகிறான், அந்த முயற்சிகளில் தலையாய முயற்சி என்று ஒன்றைக் கூறவேணுமானால் நம்மாழ்வாரால் ப்ரபந்தம் பண்ணப்பட்டு அதை நாட்டுக்கு அர்ப்பணித்ததே ஆகும். அதை ஸ்ரீவைஷ்ணவ உலகம் நன்கு அறிந்து கொண்டாடி வருகின்றது..

நம்மாழ்வார் கலிபிறந்து 42 நாட்கள் கழிந்து 43 வது நாளிலே தோன்றினார். ஸ்ரீவைஷ்ணவ பரம்பரையில் (அதாவது ஸ்ரீமந் நாராயணனே பரதெய்வம் என முழுமனதுடன் நம்பும் குடியில்) பிறந்தவர். சற்றேறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன் அவதரித்த அவருடைய பிரபந்தம் இன்றும் மெருகு குறையாமல் வழங்கப்பட்டு வருகிறது.. காலதத்வம் உள்ள வரை அழியாது.

ஆழ்வார்களில் தலைசிறந்தவர் இவர். இவருடைய திருமேனியின் ஒவ்வொரு அவயவத்திலும் ஒவ்வொரு ஆழ்வாரின் அமைப்பு இருப்பதாக பெரியவர்கூறுவர். நம்மாழ்வார் நான்கு வேதத்தையும் தமிழாக்கித்தந்தவர். அதாவது நான்கு வேதஙுகளும் முக்கியமாக எதை எதைப் பேசுமோ அதையே, அந்தக் கருத்தையே தமிழ் மொழியில் தந்து இருக்கிறார். மதுரகவி ஆழ்வாருக்கு, நம்மாழ்வார், மற்ற ஆழ்வார்களின் பாசுரஙுகளையும் சேர்த்துக்கொடுத்தார். பின்பு நாதமுனி என்ற ஆசாரியன் காலத்தில் அவருக்கு 4000 பாடல்களையும் யோகப் பயிற்சி மூலம் நம்மாழ்வார் போதித்தார். ஆனபடியாலே 4000 பாடல்களும் நம்மாழ்வார் மூலமே வெளிப்பட்டன எனலாம்.

கம்பர் காலத்தில் சடையப்ப வள்ளல் உதவியால் இராமாயணம் பாடி முடித்த கம்பர், அதை அரஙுகேற்ற ஸ்ரீரஙுகம் வந்து ரஙுகராஜனை வணஙுகி அரஙுகேற்ற அனுமதி கேட்டார். அரஙுகன் கம்பனிடம், “என்னைப் பாடினீர் ( அரஙுகனே ராமனும் கிருஷ்ணனும் தானே) நம் சடகோபனைப் பாடினீரா ? என்றார். சுடகோபன் என்பவர் நம்மாழ்வார். நமக்கு சடகோபன், மாறன் இப்படிப் பல பெயர்கள். ஆழ்வாருடையது என்று தெரிந்தாலும், நம்மாழ்வார் என்றால் தான் அவருருவம் மனக்கண் எதிரில் வரும். இந்த “நம்” பட்டம் நம்பெருமாள் தந்த பட்டம்.

“நம் சடகோபனைப் பாடினையோ என்று நம்பெருமாள் விஞ்சிய ஆதரத்தால் கேட்ப கம்பன் விரைந்துரைத்த செஞ்சொல் அந்தாதி” என்று கடகோபரந்தாதிக்கு சிறப்புப்பெயர் அமைந்துள்ளது.

நம்பெருமாள் அன்று ஆழ்வாரை நம் சடகோபன் என்று கூறியது முதல் அவர் நம்மாழ்வார் என்று செல்லமாக அழைக்கப்பட்டு வருகிறார். அரஙுகனுக்கு ஆழ்வாரிடம் கொள்ளமாளாத காதல், பரிவு, வாஞ்சை எல்லாம் உண்டு. ‘நம்’ என்ற வார்த்தை எளிதில் அனைவரையும் சொந்தமாக்கிக் கொள்ளும் வார்த்தை., என் அகத்துக்கு வா என்பதை நம்மாத்துக்கு வா என்றால் மகிழ்ச்சியுடன் வருவரல்லவா ? அந்த ஈர்ப்பு அந்த ‘நம்’ என்ற வார்த்தைக்கு உண்டு. குழந்தைகள் தஙுகள் கையிலுள்ள பொருட்களை என்னோடது என தனதாக்கிக் கொள்ளுமல்லவா ? அந்த உரிமை உள்ள வார்த்தை அது.. எத்தனை உரிமை ஆழ்வாரிடம் அரஙுகனுக்கிருந்தால் “நம் சடகோபன்” என்பர், இதைக் கேட்டபின் தான் கம்பர் “சடகோபரந்தாதி” என்ற நூலியற்றுகிறார். அதன் பின் தான் இராமாயண அரஙுகேற்றம் சகல அஙுகஙுகளுடனும் பஙுகமில்லாமல் நடந்தது..

இராமாயண அரங்கேற்றத்தில், அந்த இனிய மண்டபத்தில் மேட்டிலிருந்த நரசிம்மன் இராமாயணத்தைத் தலையசைத்துக் கேட்டதாகக் கூறுவர். முற்றிய அன்பின் வெளிப்பாடாக எது வேண்டுமானாலும் நடக்கும், கம்பர் தன் சடகோபரந்தாதியில் 'அந்தமிலா மறையாயிரத்தாழ்ந்த அரும் பொருளைச் செந்தமிழாகத்திருத்திலனேல் நிலத்தேவர்களும் தந்தம் விழாவும் அழகும் என்னாம் தமிழர்கவியின் பந்தம விழா வொழுகுங்குருகூர் வந்த பண்ணவனே'' என்கிறார்.

தன்னுடைய ப்ரபந்தங்களின் மூலமாக வேதத்தின் விழமிய பொருட்களையே நிரம்பத்தந்த ஆழ்வாருடைய அந்தப்ரபந்தங்கள் அவதரிக்க வில்லையானால், கோவில்களும் விழாக்களும் இத்தனை அழகு பெற்றருக்க முடியாது என்று கம்பர் அபிப்ராயப்பட்டருக்கிறார் இப்போது நாம் அனுபவிக்கும் கோவில் உத்ஸவங்கள் ஆழ்வார்களின் அருளிச்செயல்களால் பொலிவுபெற்றவை அல்லவா ?

ஆழ்வாரின் இனிய பாடல்களில் ஊறித் திளைத்த மணவாளமாமுனிகள் தன் உபதேச ரத்தினமலையில்,

"நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
யென்பர் அவரவர் தம் ஏற்றத்தால் -- அன்புடையோர்
சாத்து திருநாமஙுகள் தாம் என்று நன்னெஞ்சே
ஏத்தனைச் சொல்லி நீ இன்று''
என்று உகந்து அருளிச் செய்தார்.

அன்புமேலோஙுகும்போது உகந்து வைத்த பெயர்களாம் நம்பெருமாள், நம்மாழ்வார், நஞ் சீயர், நம்பிள்ளை என்பன. நால்வரையும் அனைவருக்கும் சொந்தமாககவேண்டும் என்ற உள்ளன்பால் மாமுனிஇப்படி ஞாபகப்படுத்தினார்.

திருவரங்கத்திலே அரையர் என்று சொல்லப்படுமவர், ஆழ்வார் பாசுரங்களுக்கு ஆடிப்பாடுவார். பொருள் விளங்க அபினயம் காட்டுவார். ஆந்த அபிநயத்துக்கு மயங்கிய அரங்கநாதன் மிகமகிழ்ந்து தன் மகிழ்ச்சியை முகத்தில் காட்டினான். அதைக் கண்ட அரையர் ஸ்வாமி பெருமாளைச் சேவித்தீர்களா ? நம்பெருமாளை சேவித்தீர்களா ?! என்று குதுாகலித்து அரங்கநாதனுக்கு நம்பெருமாள் என்று இனிய நாமத்தைச் சாற்றி அரங்கனை ஆசைப்படுமவருக்கெல்லாம் பொதுவுடைமை ஆக்கிவிட்டார்.

பட்டர் என்ற ஆசார்யப்பெருந்தகை காலத்திலே திருநாராயணபுரத்திலே இருந்த வேதாந்தி மிகக் கற்றவர் உண்மையிலேயே சாஸ்த்திரஙுகள் மற்றும் சாமான்ய சாஸ்த்ரஙுகளில் மிகமிக மிகப்புலமை வாய்ந்தவர். தன்னிடம் வாதில் வெல்பவர் இருந்தால் வரலாம் என்று மேப்பட இருந்திக்கிறார். பட்டர் , திருமங்கை ஆழ்வாரின் திருநெடுந்தாண்டகம் என்ற திவ்ய ப்ரபந்தம் கொண்டு வேதாந்தியை வென்றார். அந்த வேதாந்தி பட்டரின் அறிவுக்கு மயஙுகி சிஷ்யரானார். தன் பெரும் செல்வத்தைத் தன் சொந்த பந்தஙுகளுக்கு கொடுத்துவிட்டு அரங்கனுக்காகக்கொண்டு வந்த பொருளுடன் யதியாகி (சந்யாசியாகி) பொருளை பட்டர் திருவடிகளில் சமர்ப்பித்து நின்றபோது, நஞ்சீயரே வாரும் என பட்டர் அன்புபெருக அழைத்தாராம்.

பின்பு நஞ்சீயர் பட்டரின் காலட்க்ஷேபத்தில் ஆழ்நது திருவர்யமொழிக்கு தான் ஒரு வ்யாக்யானம்செய்கிறயார். அதை ஏடு படுத்தினார். ஏட்டில் எழுத்து அத்தனை தெளிவாக இல்லை என்று தினம் வ்யாக்கயானம் கேட்க வரும் திருகலிகன்றி தாஸர் என்பார் நல்ல கையெழுத்துக்குச் சொந்தக்காரர் என அறிந்து, நம்மூர்வரதர் என்ற அவரின் இனியபெயரால் அழைத்து, ஏடுகளைக் கொடுத்து இதை நன்கு எழுதிவாரும் என்று அனுப்பினார். காவிரி

ஆற்றைக் கடந்து அவர் தன் இருப்பிடம் சென்று எழுதி வரவேணும். காவிரியில் வெள்ளம் தடீரென வரவும் ஏடுகள் நழுவி விட்டன. நழுவியதை எந்த முயற்சியாலும் திரும்ப எடுக்க முடியாத சூழல் ஏற்படுத்தியது நீர் சூழல் செய்வதறியாது தவித்து. பின் தேறி, தானே நஞ் சீயரிடம் கேட்ட வற்றை அப்படியே ஏடுபடுத்திக் கொணர்ந்து கொடுத்தார். அதனுடைய வாசகநுகளின் அமைப்பால் நஞ்சீயர் கவரப்பட்டு இது நான் எழுதியதல்லவே என்று கூறி, உண்மையை அறிந்து கொண்டார். நம்பிள்ளையே வாரும் என்று மிகவும் கொண்டாடினார். சொல்லமாளாத இன்பம் அன்போடு இயல்பாகப்பெருக்கெடுக்கும் போது வைத்தபெயர்கள். நம்- - என்பது எத்தனை இயல்பாக பொதுவாகிறது என்று இன்றும் நாம் காணலாம். குழந்தைகள் “என்னோடது” என்று சேர்த்து அனைத்துக்கொள்வர் தாஙுகள் விரும்பியதை. அதேபோல இந்த நம்பெருமாள் நம்ஆழ்வார், நஞ்சீயர், நம்பிள்ளை இவர்களும் நமக்கு ஒரு உறவுபோல் தோன்று வது அவர்களுக்கு கிடைத்த “நம் பட்டமே என்றால் தகும். திருவாய்மொழி 1102 பாடல்களில் உயிரான பாடலான 9-610 “வாரிக்கொண்டு” என்பதில் எம்பிரானையே தனக்கு எல்லாமாகக்கொண்ட ஆழ்வாரை – “என்னோடது” என்று இன்பமுடன் பருகினான். பின்பு நமக்காக “நம் ஆழ்வார்” என்று கூறி தானும் நம்முடன் சேர்ந்து கொண்டான் பரமன்

ஆசார்யஹ்ருதயம் என்ற இனிய நூலில் நம்மாழ்வார் பெருமையே பேசப்பட்டிருக்கிறது. சுகல பெரியவர்களையும் விட ஏன் எம்பெருமானையும் விட ஆழ்வாரே மிகவும் கொண்டாடத்தக்கவர் என அந்த நூலின் மூலம் அறியலாம். ஆழ்வார் எப்படிப்பட்டவர் என்பதையே முக்கியமாகக் கூறும் அந்த நூலின் 82 வது சூர்ணை. (சூர்ணை – மகாவாக்யம்)

“ஜனகதசரத வஸுதேவ குலஙுகளுக்கு மூத்த பெண்ணும்
நடுவிற் பிள்ளையும் கடைக்குட்டியும் போலே இவரும் பிறந்து
புகழுமாக்கமுமாக்கி அஞ்சிறையுமறுத்தார்”

என்பது. இந்நூலாசிரியர் அழகியமணவாளப்பெருமாள் நாயனார் விடுகதை போல விஷயம் கூறும் பாஙுகு ரசிகர்களுக்கு அற்புதவிருந்து..

ஜனகருடைய மூத்தபெண் - சீதை, தசரதருடைய நடுவிற்பிள்ளை – பரதன், வஸுதேவருடைய கடைக்குட்டி – கண்ணன்,

இந்த மூவரும் தஙுகளுடைய குணத்தாலும் இனிய செயலாலும் குலத்தை வாழவைத்து, புகழ் ஏற்படுத்தி, கஷ்டஙுகளையும் நீக்கி உள்ளனர். அதாவது

ஜகன் மாதா சீதை ஜனகர் வீட்டில் வளர்ந்ததே அக்குலத்துக்கு மிகப்பெருமை. அதற்கு மேலே சீதையின் குணஙுகளாலே குலம் மேம்பட்டது. சீதை ஜனகர் மகளாகி இருந்து இருக்காவிடின், ஜனகரை இந்த அளவு நாம் அறிந்து இருப்போமோ? அவர், ராஜரிஷிதான், பெரியஞானி அவரிடம் சுகப்ரம்மம் முதலானோர் பாடம் கற்றவர் தான். ஆனாலும் சீதையின் தந்தை ஜனகரையே நாம் நன்றாக அறிவோம்.

பரதன், மூத்தவன் இருக்க இளையவன் நம்வம்சத்தில் அரசாண்டது கிடையாது.. அந்த இழிசெயல் நான் செய்யமாட்டேன்” என்று அரும்பாடுபட்டு அந்த இக்கட்டான நிலையைத் தவிர்த்தருளினார். பரதனின் தாய் ஆசை ஆசையாய் வாஙுகி வைத்த ராஜ்யம் விஷமாகத் தோன்றியது பரதனுக்கு. தன்னையே வெறுத்துக்கொண்ட பரதன் ஆசையுடையோர் அனைவரையும் அழைத்துக்கொண்டு சித்ரகூடம் விரைந்தான். ராமனைக் கண்டான் கண்ணீருடன் அண்ணா, எனக்கென்ன தெரியும்? என்னை ராஜா வாக்க நினைத்தாளே, நீஙுகள் வாருஙுகள் அனைவரையும் காப்பபாற்றுஙுகள்” என்று புலம்பினான்.

நடந்ததென்ன ? முடிசூடவேண்டிய பரதன் அடிசூடிப்போனான். அண்ணா, “உங்கள் பாதுகை பதினான்காண்டுகள் அரசுபுரியும்”என்று பாதுகை தலையில் ஏந்தி தவக்கோலம் மாற்றாமல் தன் சுகத்தில் விரக்தியின் எல்லையில் நின்று, நல்லாட்சி தந்தான். ராமனைப் பிரிந்து அவன் பட்டவேதனை அளத்தற்கரியது..

வஸுதேவ கடைக்குட்டி கண்ணன் விபரம் நாம் நன்கறிந்ததே. தேவகியின் குழந்தைகள் ஆறு பேரையும் கல்லில் மோதிக்கொன்றவன் வேறுயாருமல்ல. அவன் மாமனே, கம்சனே தான். கம்சனை வதம் பண்ணி நல்லவர்களுக்க வாழ்வளித்தவன் கண்ணன். தாய், தந்தை, பாட்டனார் மற்றும் நல்லவர்களின் விலங்கை அவிழ்த்தவன். ஆக, சீதை,பரதன், கண்ணன் இந்த மூவருடைய இனிய பண்புகளை நம்மாழ்வார் ஒருவரே தன்னிடத்தே கொண்டவர். நம்மாழ்வார் பிறந்ததால் காரிமகாராஜாவுடைய குலம் பெருமைபெற்றது.. பரதனைப் போல இவரும் தன்னுடைய இயல்பான அடிமை நிலையை நினைந்தே வாழ்ந்தவர். ஆழ்வாரும் ராஜாவின் மகன்தானே. ஆத்மாவை நினைத்து ஆத்மா எப்போதும் எம்பெருமானுக்கு அடிமை என்ற ஞானம் ஆழ்வாரிடம் எப்போதும் இருந்தது. தான் பிறந்த ஊரான ஆழ்வார் திருநகரி என்ற திருக்குருகூர்க்கு பெருமை சேர்த்தார் “ஏற்கும் பெரும் புகழ் வண்குருகூர் சடகோபன்” “மலிபுகழ் வண் குருகூர் சடகோபன் என்று இவர் தன் குலத்துக்கு பெருமைசேர்த்தார். உலக மக்களுக்கு சம்சாரத்திலிருந்து விடுதலை பெறஉதவும் உபதேசங்களைத் தந்தருளினார். நம்மாழ்வார் பிறக்காமல் இருந்தால் காரிமகாராஜவும் உடைய நங்கையாரும் நமக்கு அறிமுகமே ஆகிஇருக்கமாட்டார்கள், எம்பெருமான் தன்னை விட்டகன்றதாக நினைத்து எத்தனைபாடு பரதன் போல்பட்டார் ஆழ்வார். “கங்குலும் பகலும் கண்துயிலறியாது கண்ணநீர் கைகளால் இறைத்து இட்டகை இட்டகால்களாயிருந்து” என்று இருந்தவர் ஆழ்வார். பரதனைப் போல் இருந்த இடத்திலிருந்தே பரமனின் நியமனப்படி மக்கள் நன்மை நினைந்து பாசுரம் மூலம் நம்மை வாழ வைத்தார். வாழ்ந்து வருகிறோம்.

கண்ணன் குலத்துக்குப் பெருமை சொல்லவும் வேண்டுமோ ? அவர் தாய் தந்தை விலங்கை அவிழ்த்தது போல சம்சார விலங்கை ஆழ்வார் தன் பாசுரம் மூலம் ஒழித்துக்கட்டினார். இதன் மூலம் ஆழ்வாரிடமே பிராட்டி, பரதன், கண்ணன் இவர்களின் குணநலன்கள் நிரம்பி வழிவதை அறிகிறோம்.

வேதத்துக்கு எளிதில் பொருள் விளங்குமாறு இல்லாது இருக்கும் ஒரு குற்றமுண்டாம். ஆழ்வார் ப்ரபந்தம் அப்படி இன்றி யாருக்கும் பொருள் விளங்குமாறு இருக்கிறது. ஏனவே ஆழ்வார் - “நம் ஆழ்வார்” அவர் அடிபணிந்து வையத்தில் வாழ்வாங்கு வாழ்வோம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.